புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

==========================================================================

# தொல்காப்பியக் களவியலில் பெயரறியாப் பாடல்களில் செவிலியின் மாண்புகள்

==========================================================================

**ஆய்வாளர்:**
**பெ. அசோக்குமார்,**
**பதிவு எண். R20162152 / 2019-20**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ் உயராய்வு மையம்,*
*அழகப்பா அரசு கலைக்கல்லூரி,*
*காரைக்குடி - 630 003.*

**நெறியாளர்:**
**முனைவர் க.சொல்லேருழவன்,**
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ் உயராய்வு மையம்,*
*அழகப்பா அரசு கலைக்கல்லூரி,*
*காரைக்குடி - 630 003.*

==========================================================================

**ஆய்வுச் சுருக்கம்**

*மக்கள் வாழ்வியல் அகம், புறம் எனும் கோட்பாட்டில் காணப்படுகிறது. அவ்வாறாகக் காணப்படும் முறையில் மக்கள் தன்னிச்சையாக வாழாமல் இப்படித்தான் வாழ வேண்டும்*

என்று இலக்கணம் வகுத்தவர்கள் தமிழர்கள். அந்த அடிப்படையில் இலக்கணத்தை முதலில் வகுத்தவர் தொல்காப்பியவர். அகம் - புறம் வாழ்வியல் இலக்கணம் தருகின்ற பொழுது அகத்திற்கு தனி இலக்கணம் புறத்திற்கு தனி இலக்கணம் என்ற பாகுபாடு உள்ளது. இதனில் அகத்தில், "சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார்" என்ற இலக்கண விதி உள்ளது. அந்த அடிப்படையில் பொதுப் பெயராக உள்ள செவிலி சிறப்புத் தன்மை பெற்றவள். பெற்ற தாயைக் காட்டிலும் வளர்ப்புத் தாய் செவிலி போற்றுதற்கு உரியவளாகிறாள். அப்பேற்பட்ட செவிலியின் மாண்புகளை எடுத்துரைப்பது அவசியமாகிறது. அக்கூற்றின் அடிப்படையில் செவிலி தலைவிக்கு தரும் முக்கியத்துவம் அறத்தோடு நின்றலின் பாங்கு மதியுடன் படுதலின் செவிலியின் சிறப்பு போன்றவற்றை எடுத்துக்கூறப்படுகிறது.

***கலைச்சொற்கள் :***

*வெறிஅயர்தல் – வெறிக்களம் – கட்டுவிரிச்சி – அகில்புகை – மதியுடம்பாடு.*

***முன்னுரை***

சமுதாயம் ஒப்புக்கொண்ட பழக்கவழக்கங்களையும் நடைமுறை நெறிகளையும் மக்கள் வாழ்வியலுக்கு உகந்தவை என்ற நிலையிலும் வரையறை செய்தவர்கள் தமிழர்கள். சமூக வாழ்வியலில் மனித எண்ணத்தை வெளிப்படுத்தக்கூடிய கருவியே மொழியாகும். மொழி அமைப்பால் தமிழ் மொழி தனிப்பெரும் சிறப்புக்குரியது. ஒரு இலக்கியம் செம்மார்ந்த நிலையை அடைய இலக்கண விதிகள் இன்றியமையாதாவையாக விளங்குகின்றன. இலக்கியத்தில் இலக்கண நூலான தொல்காப்பியம் முதன்மை பெறுகிறது. இவ்விலக்கண நூல் மூன்று அதிகாரப்பாடு உள்ளது. மனித வாழ்வியலில் அகம், புறம் எனும் கோட்பாட்டை பொருளதிகாரத்தில் குறிப்பிடுகிறார். அகமாந்தர்கள் பலவாராயினும் வளர்ப்புத் தாயாக விளங்கும் செவிலியின் பங்கு போற்றுதற்குரியது. களவியலில் செவிலியின் தன்மையை தொல்காப்பியத்தில் கூறிய நூற்பாவிற்கு எடுத்துக்காட்டாய் கூறிய பெயர் அறியாப் பாடல்களின் வழி செவிலியின் மாண்புகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

**தொல்காப்பியத்தில் செவிலி**

தமிழ் என்பது வெறும் மொழி மட்டுமன்று வாழ்க்கையை வடிவமைத்துத் தந்த வலிமையான பாதை இந்தப் பாதையில் ஆதி மைல் கல்லாக ஆதாரங்களைச் சுமந்து இன்றைய தலைமுறைக்கும் அறிவூட்டும் தாய்மடியாக விளங்குகிறது. தொல்காப்பியம் பல சூத்திரங்களை உள்ளடக்கி உலகக் கோட்பாடுகளுக்கு வழிகாட்டுகிறது. "தமிழ் மொழியில்

*தொல்பொருள்களைப் போல தோண்டத் தோண்டப் புதிய கருத்துக்களை வெளிப்படுத்தும் வளமையான ஆவணமாகத் தொல்காப்பியம் திகழ்கிறது"[1] என்பர்.*

*தொல்காப்பிய நூற்பாவில் பெண்டிரின் இலக்கணங்கள் வகுத்துக் கூறப்பட்டுள்ளன. அதனில் அவர்களின் பண்புகள் சிறப்புடையதாக உள்ளது. இதனை,*

***"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்***
***அறிவும் அருமையும் பெண்பாலான"[2]***

*எனும் நூற்பாவழி அறிய முடிகிறது. மேலும் தொல்காப்பியர் செவிலியரின் திறனைக் கூறுகின்ற பொழுது,*

***"நல்லவை உரைத்தலும் அல்லவை கழிதலும்***
***செவிலிக் குரிஆகும் என்ப"[3]***

*எனும் நூற்பாவில் நற்றாய்க்கு இணையாய் தலைவியின் மீது பேரன்பு கொண்ட செவிலி என்பவள் தலைவி. தோழிக்கு நல்லவை பற்றி எடுத்துரைப்பதிலும் தீயவற்றைக் கடிந்துரைப்பதிலும் தவறமாட்டாள் என்பதாகும்.*

**செவிலியின் இயல்பு**

*நல்ல பெரிய சிறப்பினையுடைய உணதற்கரிய பொருள் யாவற்றையும் கூறும் கட்டுப்பாடு உடைய வளாதலால் தாயெனப்படுவாள் இத்தன்மைக்கு உரியவள் செவிலியே. இதனை,*

***"ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்***
***தாய் எனப்படுவாள் செவிலியாகும்"[4]***

*எனும் நூற்பாவில் அறிய முடிகிறது. செவிலித்தாய் தலைவியை நல்ல ஒழுக்கத்துடன் வாழ வழிவகை செய்பவள் என்பதை அறிய இடமுண்டு.*

*செவிலித்தாயின் இயல்புகள் செயல்கள் தலைவி தோழியை வழிநடத்தும் பாங்கு போன்றவை தொல்காப்பியக் களவியலில் 25-ஆவது நூற்பாவில் குறிப்பிடுகிறது. அந்நூற்பாவில் காணப்படுகின்ற செவிலியின் கூற்றுக்களை பெயர் அறியாப் பாடல்கள் மூலம் எடுத்துக் கூறுவது இக்கட்டுரை நோக்கமாகும்.*

***"களவுஅலர் ஆயினும் காமம்மேற் படுப்பினும்***

***அளவுமிகத் தோன்றினும் தலைப் பெய்து காணினும்***

***கட்டினும் கழங்கினும் வெறிஎன இருவரும்***

***ஒட்டிய திறந்தாற் செய்திக் கண்ணும்***

***ஆடிய சென்றுழி அழிவுதலை வரினும்***

***காதல் கைமிகக் களவின் ஆறாற்றலும்***

***தோழியை வினாவலும் தெய்வம் வாழ்த்தலும்***

***போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழிஇக்***

***கற்பின் ஆக்கத்து நற்றற் கண்ணும்***

***பிரிவின் எச்சத்து மகள் நெஞ்சு வழிப்பினும்***

***இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்***

***இன்ன வகையிற் பதின்மூன்று கிளவியொடு***

***அன்னவை பிறவும் செவிலிமேன"***[5]

*என்னும் நூற்பா செவிலியின் கூற்றாக நூற்பா உள்ளது. இவற்றில்,*

***"ஆடிய சென்றுழி அழிவுதலை வரினும்***

***... தோழியை வினாவலும் தெய்வம் வாழ்த்தலும்***

***போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழிஇக்***

***கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்***

***... இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்"***

*என்னும் நூற்பா வரிகளுக்கு மட்டும் ஐந்து பெயர் அறியாப் பாடல்கள் செவிலி கூற்றாக எடுத்துக்காட்டாய் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் வழி செவிலியின் மாண்புகள் எடுத்துரைக்கப்படுகின்றன. இதனால் குறிஞ்சித் திணையில் நான்கு பாடல்களும் நெய்தல் திணையில் ஒரு பாடலும் காணப்படுகிறது. மேற்கூறிய செவிலி கூற்று தொல்காப்பிய நூற்பாவிற்கு சில வரிகளுக்கு மட்டும் பெயர் அறியாப் பாடல்கள் காணப்பெறுகிறது.*

**செவிலியின் வெறியாட்டு**

***"ஆடிய சென்றுழி அழிவுதலை வரினும்"***

*என்னும் நூற்பாவின் வரியின் பொருளாக தலைவிக்காக வெறியாட்டு நிகழ்த்திய பின்னும் துன்பம் மிகுந்துள்ளது என்பதை எடுத்துரைக்கிறது. அதனில் வெறியாட்டு என்பது யாது அதன் பின் துன்ப நிகழ்வுகள் பற்றியும் காரணங்களும் தீர்வுகளும் எடுத்துரைக்கப்படுகிறது.*

*பழந்தமிழ் மக்களிடத்தே வெறியாடல் அல்லது வெறி அயர்தல் என்ற வழிபாட்டு வழக்கம் நிலவி வந்துள்ளது. வாழ்வில் புரிந்து கொள்ள முடியாத தீர்வு காண முடியாத*

*சிக்கல்கள் தோன்றும்போது அதனைத் தீர்த்திடுமாறு செய்யும் பூசையாக இவ்வெறியாட்டு காணப்பட்டுள்ளது.*

*மகளிர் உடல் நலம் குன்றி உடல் அழகும் வேறுபடும் போது அதற்கானக் காரணமும் தீர்வும் அறிய அவர்தம் தாயார் (செவிலி) வெறியாட்டை நிகழ்த்தும் பழக்கம் காணப்படுகிறது.*

*வெறிக்களம் என்னுமிடத்தில் நடுவே நட்டு அதைச் சுற்றி மக்கள் வட்டமாக அமர்ந்து கொள்வர். "மக்களால் தம்மால் தீர்க்க முடியாத மனச்சிக்கல் அல்லது உடற்குறைகளை அதற்குரியோர் முருகனை மனதில் வைத்து வழிபட்டு வெறியாட்டம் நிகழ்த்தி குறி சொல்வோனுக்கு வேலன் என்று பெயர்"[6] என்பர். வேலன் முருகன் பெயரை வாழ்த்தித் தன்மேல் முருகன் வந்து நிற்பதாக ஆடுவான் அவன் ஆட்டத்திற்குத் தகுந்தாற்போல் பல்வகை வாத்தியங்கள் மிகுதியான ஒலியுடன் ஒலிக்கும் வேலன் சிக்கலுக்கானக் காரணம் கூறி தீர்வும் கூறுவான் என்பர்.*

*தலைவி வெறியாட்டு நிகழ்த்தியும் துன்புறுகிறாள் என்ற நிலையில் செவிலி சில செய்திகளை அறிவுரைகளாகச் சொல்கிறாள்.*

***"ஆடிய சென்றுழி அழிவுதலை வரினும்"***

*வெறியாடுதல் குறிஞ்சி நிலத்தின் தெய்வமான முருகனுக்கு நடத்துவதால் குறிஞ்சித் திணையாகும். வெறியாட்டு வேண்டி முடித்த பின்னும் தலைவிக்கு வருத்தம் மிகுந்துள்ளது. வருத்தத்திற்கு செவிலித்தாய் சில செயல்களைச் செய்து முடிக்கிறாள். இதனை,*

***"வேங்கை யிரும்புனத்து வீழுங் கிளிகடியாள்***
***காந்தண் முகிழ் விரலாற் கண்ணியுங் கைதொடா***
***ளேந்தெழி லல்குற் றழைபுனையா ளெல்லேயேன்***
***பூந்தொடியிட்ட புலம்பு மறிதிரோ"***

*எனும் பெயர் அறியாப் பாடலில் தலைவி தோழியிடம் என்னுடைய மலைநாடன் மணியினை உமிழ்ந்த நாகம், காந்தள் மலர்களில் உள்ள மகரந்தத்தை வெளியே பறக்கச் செய்த வண்டு இவற்றின் காரணமாக நாகம் உமிழ்ந்த மணி செம்மை நிறமாகத் தோன்றும். இதைப் பார்க்கின்ற பொழுது மருளும் படியாக உள்ளது. விடர்கள் வருகின்ற கொடிய வழியை குறியீடாக உள்ளதால் தலைவன் பாதி இரவில் இருளாக இருக்கின்றபோது வருவதை எண்ணி வருந்தியதால் என் கண்ணில் நீர் வந்தது இதைச் செவிலித்தாய் பார்க்கிறாள். இதில் கருத்து வேறுபாடு கொண்டு கட்டிவிரிச்சியும், வேலனும் முருகனை*

அழைத்து வெறியாடுதல் நிகழ்த்தியதால் நன்மை உண்டாகுமோ என எண்ணுகிறாள். இதனில் தலைவியின் துன்பத்தை நீக்க செவிலித்தாய் வெறியாட்டு நிகழ்த்துதல் புலப்படுகிறது. தலைவி மீது கொண்டுள்ள அன்பும், பொறுப்புணர்வும் வெளிப்படுகிறது. செவிலியின் செயலை தலைவி தோழியிடம் கூறுவதாக உள்ளது. மேலும் தலைவியின் துன்பம் கண்டு வினவுவதை,

***“புனயிருங் குவளைப்***
***போதுவரி நாற்றஞ்***
***சுனையர மகளிரவ்வே இளைய***
***வேங்கை யொள்வி வெறிகமழ் நாற்றமொடு***
***காந்த ணாறுப கல்லர மகளி***
***ரகிலு மாரமு நாஅ றுபவன்***
***றிறலகு மரபிற் றெய்வ மென்ப***
***வெறிபுனங் காவ லிருந்ததற் றொட்டுத்***
***தீவிய நாறு மென்க***
***னறியேன் யானி தஞ்சுதக வுடைத்தே”***

எனும் பெயர் அறியாப் பாடலில் செவிலித்தாய் என் மகளணிந்த குவளையின் மணம் சுணையில் இருக்கின்ற மகளிரிடம் போய்விட்டது. வேங்கை மலர் காந்தள் மலர்களின் மணம்மலையில் காணப்படுகின்ற மகளிரிடம் போய்விட்டது. அகில் சந்தன மணமும் வீசுகின்ற தெய்வமானவன் முருகனாவான். திணைப்புலக் காவல் இருந்த காரணத்திற்காக மேற்கூறிய மணங்களை இழந்து என் மகள் இருக்கிறாள்.

என் மகள் மீது வேறு மணம் வீசுகிறது. இதன் காரணத்தை நான் அறிய இயலவில்லை என் மகள் மீது வீசக்கூடிய மணம் எதுவென்று உணர முடியாததற்கு என்ன காரணம் என்பதை தெரிவதற்கு திணைப்புலம் காக்கின்ற பொழுது தலைவனுடன் கூடல் நிமித்தமாக இருக்குமோ என எண்ணுகிறாள். தலைவி படுகின்ற துன்பம் செவிலியின் மனதிலும் துன்பத்தை விளைவிக்கிறது. அத்துன்பத்தை அறிந்து அதை நீக்க முயல்கிறாள். காரணம் தவறாக இருந்தால் அந்த இடத்தில் நல்ல ஒழுக்க நிலைகளை எடுத்துக் கூறி நல்வழிப்படுத்துபவளாக செவிலி இருந்துள்ளாள். குறிஞ்சி மலை காந்தள் மலர் இவையெல்லாம் குறிஞ்சி நிலத்தில் காணப்படுகின்றதினால் இது குறிஞ்சித் திணையாகும்.

**செவிலி அறத்தோடு நிற்றல்**

*'தோழியை வினவதும்' அக வாழ்க்கைக்கு நிகழ்வில் அறத்தோடு நிற்றல் என்பது முதன்மையான மரபாகும். "தலை மக்களின் வாழ்வை அறவழியில் நிலைப்படுத்த விரும்பும் தன்மையில் தோழி, செவிலி போன்றோர் தலைவன், தலைவி உண்மை நிலையை உரியவர்க்கு உரியவாறு எடுத்துரைப்பது அறத்தோடு நிற்றல்"[7] என்பர்.*

*மேலும், "தலைவன் தலைவியின் அன்பு கலந்த காதல் வாழ்க்கையை நிலை பெற செய்து கற்பு வாழ்வை மலரச் செய்வதே அறத்தோடு நிற்றலின் பயனாகிறது கற்பாக்கும் செயலே"[8] என்பர். இக்கூற்றுகளின்படி, 'தோழியை வினவதும்' என்பதில் அறத்தோடு நிற்றல் தன்னை வெளிப்படுகிறது. இதனை,*

***"நெடுவே லேந்தி நீயெமக் கியா அர்***
***தொடுத லோப்பென வரற்றது மரற்றுங்***
***கடவுள் வேங்கையுங் காந்தளு மலைந்த***
***தொடலைக் கண்ணி பரியல மென்னும்***
***..........................................................***
***... தம்பொதி கிளவியென் பேதை***
***யாங்கா டினபோ நின்னொடு பகலே"***

*என்னும் பெயர் அறியாப் பாடலில் தோழியை செவிலி வினவுகிறாள். இது குறிஞ்சித் திணைப் பாடலாகும். இதனில் தோழி என்பவள் செவிலியின் மகள். தலைவியின் செயலைத் தோழியிடம் கேட்டு அறிகிறாள் செவிலி. தலவியிடம் கொடுத்த மாலை மலர்களைத் தலைவி வெறுத்து மறுக்கிறாள். நான் எந்த இடத்தில் உன்னுடன் ஆடினேன் என்று கூறுக என்று தலைவனிடம் வினா எழுப்புகிறாள் தலைவி. இச்செயலைக் கண்ட செவிலி இவ்வாறு நடப்பதற்குக் காரணம் என்ன என்பதை தோழியிடம் கேட்டு அறிகிறாள். இவற்றில் தலைவியின் ஒழுக்கப் பண்பின் தன்மையை செவிலிக்கு முக்கியப் பங்கு உண்டு என்பதை உணர முடிகிறது. மேலும் தலைவியிடம் கேட்காமல் அவள் தோழியிடம் கேட்டு அறிந்ததன் வழி செவிலி அறத்தோடு நிற்றல் பண்பும் வெளிப்படுகிறது. மேலும்,*

***"இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்"***

*தலைவன் தலைவி இருவருக்குரிய குடிப்பொருள்களைப் பற்றி கூறுவது குறிஞ்சித் திணையாக உள்ளது. செவிலி அறத்தோடு நிற்றல் செய்தியை விளக்குவதாகவும் அமைகிறது.*

***"அவனுந்தா னேன லிதனைத் தகிற்புகை யுண்டியங்கும்***
***வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்***

***தேனி னிறாலென வேணியிழைத் திருக்குங்***
***கானக நாடன் மகள்***
***..................................................***
***எனவாங் கறத்தோடு நின்றேனைக் கண்டு திறப்பட***
***வென்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்”***

*என்னும் பெயர் அறியாப் பாடலில் திணைப்புலம் காக்கச் சென்ற மகளிரேல்லாம் ஒன்று கூடி அகில்புகையை கூட்டுகிறார்கள். அச்சமயத்தில் பரணியில் மகளிர் மூட்டும் அகிலின் புகையை சுவாசித்த வண்ணம் வானில் உலா வரும் திங்களைத் தேனீறால் என்று தாம் ஏறும் ஏணியைச் சரி செய்து வைக்கும் கானக நாடன் மகனாவான். அதனால் நீங்கள் கவனமாக இருந்து திணைப்புலம் காக்க வேண்டும் என்று செவிலி அறத்தோடு நின்று ஒழுக்கத் தன்மையை எடுத்துக் கூறினாள். இதனில் தலைவி மீது கொண்டுள்ள அன்பு, அக்கறை, பொறுப்பு போன்றவை வெளிப்படுவதை அறிய முடிகிறது.*

*செவிலியின் மதியுடம்பாடு*

*தலைவியின் உடன் போக்கு அறிந்த பின்னர் செவிலி தோழியோடு மதியுடம்பட்டு நின்று தலைவி கற்பு மிகுதியாக உள்ளவள் என்பதை,*

***“போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழிஇன்***
***கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்”***

*என்று தொல்காப்பியர் செவிலியின் தன்மையைக் கூறுகிறார். இதன் அடிப்படையில் மதியுடம்படுதல் என்பது, “களவு ஒழுக்கத்தால் தலைவியிடம் தோன்றும் வேறுபாட்டின் காரணமும் அவளுக்குப் புலப்படாததாலும் இருவர் கருத்து முரண்பாடு ஏற்படுகின்ற பொழுது அப்பொழுது இருக்கின்ற தோழியோ, செவிலியோ தன் மதியுடன் ஒன்றுபடுத்தி உணர்வார்கள். இவ்வாறு மூவர் மதியினையும் ஒற்றுமைப்படுத்தி இஃது மதியுடம்படுதல் என்று உரைப்பர்”[9] என்பர். மேலும் தொல்காப்பியத்தில்,*

***“குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்***
***இருவரும் உள்வழி அவன்வர உணர்தல் என***
***மதியுடன் படுத்துதல் ஒருமூவகைத்தே”[10]***

*என்று கூறப்படுகிறது.*

***“முயங்குகம் வாராய் தோழி தயங்குபு***

***கடல் பெயர்ந் தன்ன காலைங் கல்லெனப்***
***பெயல் கடைக் கொண்ட பெருந்தண் வாடை***
***வருமுல வெப்பக் கொழுநற் போற்றிய***
***சென்றன ளம்மநின் றொழி யவனோடு***
***என்றினி வருஉ மென்றனள்***
***வலந்துரை தவிர்ந்தன் றலர்ந்தே ஆரே”***

*எனும் பெயர் அறியாப் பாடலில் மதியுடம்படுத்தல் பற்றி கூறப்படுகிறது. கடல் போல என்றுரைப்பதால் நெய்தல் திணையாகும். கடல் பெயர்ந்தார் போலக் கல்லென மழை பெய்த கடைசியில் வந்த வாடையின் குளிரைத் தன்முலை வெப்பத்தால் கணவனுக்கு ஆற்றி அவனுடன் சென்றாள். தோழி இனி நம்மூர் வருமோ என்று என் தாய் (செவிலி) என்னிடம் கூறினாள். இவற்றில் செவிலியின் கற்பின் ஆக்கத்தினால் நின்றாள். அதனால் நாம் சண்டையிடுதல் போல் மகிழ்வோம் என்று தோழி தலவியிடம் கூறினாள். இதனில் செவிலி தலைவியின் நிலையையும் கற்பின் தன்மையை வலியுறுத்திச் சொல்வது மனது துன்புறாமல் மதியுடன் கூறியது புலனாகிறது.*

**தொகுப்புரை**

- *தொல்காப்பியத்தில் செவிலி கூற்றாக உள்ள நூற்பாவில் தோழி வாயிலாகவும் தலைவியின் நடத்தியின் தன்மையிலும் எடுத்துரைக்கப்படுகிறது.*
- *வெறியாட்டு நிகழ்த்திய பின்பும் ஏற்படுகின்ற துன்பத்தை செவிலி போக்குவதற்கு நினைக்கும் தன்மை காணப்படுகிறது. செவிலி தலைவியை உற்று நோக்கி வளர்க்கக்கூடிய தாயாகக் காணப்படுகிறாள் என்பது தெளிவு பெறுகிறது.*
- *தலைவியினுடைய செயலை செவிலி அறிந்து அதற்குத் தகுந்த அறத்தோடு நிற்றல் நிகழ்வு பெயர் அறியாப் பாடல்கள் வழி வெளிப்படுகிறது. தலைவிக்கு எத்துன்பமும் வராமல் பாதுகாக்க தன்னுடைய மதியுடம்புடுதல் நிலையை பயன்படுத்திக் காக்கிறாள் செவிலி என்பது புலனாகிறது.*
- *களவு காலத்தில் தலைவியை ஓர் ஒழுக்கப் பண்புடையவளாக வளர்க்க வேண்டும் என்ற முக்கியப் பங்கு செவிலிக்கு உள்ளது என்பது புலனாகிறது.*
- *பெயர் அறியாப் பாடல்களில் குறிஞ்சித்திணைப் பாடல்களும், நெய்தல் திணைப் பாடல் மட்டுமே செவிலிக் கூற்றின் வழி வெளிப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. செவிலித்தாய் வளர்ப்புத் தாயாக இருந்தாலும் ஈன்ற தாய்க்கு இணையாக உள்ளவள் என்று அறியப்படுகின்றது.*

**சான்றெண் விளக்கம்**

1. *புலியூர் கேசிகன், தொல்காப்பியம் மூலம் உரையும், ப. 9.*
2. *மேலது, நூற். 1154.*
3. *மேலது, நூற். 1158.*
4. *தொல்காப்பியம், களவு. நூற்.34.*
5. *மேலது, நூற்:35.*
6. *ரா.ராஜேஸ்வரி, தொல்காப்பியப் பெண்டிர், ப.53.*
7. *பக்தவச்சலபாரதி, சங்க இலக்கியத்தில் குடும்பம், ப.49.*
8. *கா. சுப்பிரமணியன், சங்ககாலச் சமுதாயம், ப. 29.*
9. *சரளா இராஜகோபாலன், சங்க இலக்கியத்தில் தோழி, ப.15.*
10. *மேலது, நூற்.36.*

**துணைநூற் பட்டியல்**


1. *புலியூர் கேசிகன், தொல்காப்பியமும் மூலமும் உரையும், சரண் புக்ஸ், 19/9 ராஜா தெரு, தியாகராயர் நகர், சென்னை - 600 017.*
2. *ரா.ராஜேஸ்வரி, தொல்காப்பியப் பெண்டிர், கௌரா பதிப்பகம், மறுபதிப்பு - 2012. சென்னை - 07.*
3. *பக்தவச்சலபாரதி, சங்க இலக்கியத்தில் குடும்பம், அடையாளம் பதிப்பகம், மூன்றாம் பதிப்பு - 2016. சென்னை - 18.*
4. *கா.சுப்பிரமணியன், சங்ககாலச் சமுதாயம், நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிமிடெட், 41-பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.*
5. *சரளா இராஜகோபாலன், சங்க இலக்கியத்தில் தோழி, ஒளி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 1986.*